This Page Intentionally
Left Blank

# வியாழக் கிழமை



ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2002

ஸ்ரீ

# சர்வஞானேத்தரம் – ஆன்ம சாக்ஷாத்காரப் பிரகரணம்

இந்த அரிய நூலானது சர்வேசுரன் முருகக் கடவுளுக்கு உபதேசித்தருளிய ஆன்ம சாட்சாத்கார மென்னும் பெயர் பெற்றதாகும். எல்லாவற்றிற்கும் முன்னவனான பரமசிவனே, என்னுள்ளத்தில் இன்று ஆன்மாவாக இருந்து இதைத் தமிழில் சொல்லுகின்றான்.

1. முழுமுதற் பொருளாம் சிவன் ''உள்ள பொருளானாது உருவமற்றதாய் எல்லாப் பொருள்களின் உள்ளும் வியாபித்து நிற்பதாய், மனதினால் அறிந்து கொள்ளக் கூடாததாயினும், குகனே! உனக்கு அந்த மெய்ப்பொருளை அடைவதற்குரிய, வேறொரு உபாயம் சொல்லுகிறேன்'' என்று கூறி, பின்னும் கூறி அருளுகிறான்.

ஸ்ரீ

# சர்வஞானேத்தரம் – ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம்

(கலிவெண்பா)

## மங்கலம்

ஆன்மாவா மீசன் குகனுக் கருள்செய்த
வான்மசாட் சாத்கார மாகுமீ — தான்மாவா
யென்னகத் தேயிருந் தின்றுதமிழ் சொல்வானம்
முன்னவ ஞய முதலென்ன — மன்னலுறும்

## நூல்

அன்னசிவன் பின்னு மருள்வான் குகனேநிற்
கன்னியஞ் சூட்சி யறைவன்மெய் — மன்னவே
நிட்களமா யாவுளுமே நிற்பதாய் நுட்பமதா
யுட்கொள்ளப் போகாதே னும்புகல — வுட்கொள் 1

2. எந்த சாஸ்திரங்களை கேட்டு 'உள்முக பாவம்' என்ற அபரோட்ச ஞானானுபவம் நன்றாக சித்தித்திடுமோ; எந்த பரம்பொருளை அறிந்தவன் சிவனாகவே ஆவானோ, எந்த ஞானத்தைப் பற்றி இதுவரையில் யாருக்கும் என்னால் சொல்லப்பட்டதில்லையோ, அந்த விஞ்ஞானத்தை இன்று என்னிடத்திலிருந்து நீ கேட்பாயாக.

எதனு லனுபவமா ஞானநன் கெய்து
மெதனையறிந் தோன்சிவ னேயா — மெதெவர்க்கு
மென்னுற் சொலப்பட்ட தின்றவ்விஞ் ஞானத்தை
யென்னிடத்தி னின்றுகே ளின்றுயான் — பன்னியிடும் 2

3. நான் சொல்லுகின்ற இந்த பரவித்தையானது, குரு சிஷ்ய பரம்பரையாக வந்ததாகும். தர்க்க வாதிகளால் அறியப்படாததாகும். இது ஜனன மரண மென்னும் பவக் கடலிலிருந்து விடுதலை பெறும் பொருட்டேயாகும். பரமமாகிய இதன் முகமானது எல்லா இடத்திலும் உள்ளதாகும்.

ஈதுகுரு பாரம் பரியத்துப் போந்ததாம்
வாதிகளெல் லாங்காண வாய்க்காதா — மீதுபவ
பந்தமுத் திப்பொருட் டாம்பரம மாமுகமோ
வெந்தத் தலத்துமுள தேயெவையுந் — தந்தே 3

4. சகல வஸ்துகளிலும் விளங்கக் கூடிய தேவன் எவனோ, எல்லாமாக பிரகாசிப்பவன் எவனோ, எவன் எங்கும் வியாபித்துள்ளவனோ, மனதினால் சிந்திக்க முடியாதவன் எவனோ; தத்துவங்களெல்லாம் தன் சொரூபமாக நிறைந்து, அவையாவுக்கும் அப்பாற்பட்டு உள்ளவன் எவனோ, அவனே தானாகிய ஆன்மா ஆவன்.

எவனெல்லா வற்று மிருக்குமித் தேவ
னெவனெல்லா மாகி யிருப்ப — னெவன்முக
மெங்குமுளா னெண்ணவொணுன் றத்துவமெல் லாந்தானுய்த்
தங்கியெலா மிஞ்சியுளன் றூன்பலவாய்ப் — பங்குபடும் 4

5. பலவிதமாக சொல்லப்படுகின்ற சகல தத்துவங்களையும் கடந்து நிற்பவன்தான், வாக்கோடு மனமும் நாமமும் சேராதவன் ஆவன். அம்முழுமுதற் பொருளாகிய அவனே நானென்று, விகற்பமற்ற மனதினால் சிவத் தியானத்தையே நீ செய்வாயாக.

தத்துவங்க ளெல்லாமுந் தான்கடந்தோன் வாக்கோடு
சித்தமு நாமமுஞ் சேராதா — னத்த
னவனு னெனவிகற்ப மற்றசித் தத்தாற்
சிவசிந் தனையேநீ செய்வாய் — நவநவமாய் 5

6. புதிது புதிதாகவும் எக்காலத்திலும் நிலைபெற்று அழிவற்றதாய் எந்தவித வேறுபாடும் இல்லாததாய், இத்தன்மையானது என்று எண்ண முடியாததாய், எங்கும் வியாபித்திருக்கும் ஞானம் எதுவோ, அதுவே மூலகாரணமும், உவமையும் இல்லாததாய் பிரகாசிக்கின்றதென்று தெரிந்திடுவாய்.

என்றுமுள தாய்நிலையா யவ்வயமா யெவ்விகற்பு
மின்றியதா யின்னதென வெண்ணவொணு — தொன்றியுள
நிட்களமா ஞான மெதுதா னிகழுமுத
றிட்டாந்த மின்றியதாய்த் தேர்தரச் — சுட்டும் 6

7. அடையாளமாக எண்ணிப் பார்ப்பதற்கு எட்டாததும், சந்தேகத்திற்கு இடமற்றதாயும், இன்னவிதமானதென்று எந்தவொரு குறியுமற்றதாய், அழிவற்றதாய், எங்கும் பரம சாந்திமயமாய் நிறைந்து, சகல விஷயங்களையும் கடந்து சுயம்பிரகாசமாய், தான் தானாக ஒளிர்கின்ற, அறியத்தக்க பொருள் எதுவோ, அதுவே நான் ஆவேன். இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

அடையாள மற்றழிவற் றுருமுப சாந்தம்
விடயங் கடந்தொளிர் வேத்ய — மடுக்காது
பாவனைக் கையம் படரா ததுவேநா
னுவனிதி லைய மிலையேது — மோவலறும் 7

8. யாராலும் தள்ளமுடியாத முழுமுதற் கடவுளாகிய அந்தப் பரமசிவ சொரூபமாயிருப்பது நானே. சகல மந்திரங்களின் அதிஷ்டான சொரூபமாய் இருப்பவனும் நானே. அந்த மந்திரங்களை கடந்து அதற்கும் அப்பாலாய், பிரபஞ்ச சிருஷ்டி, சம்ஹாரம் முதலான எந்த தொழில்களும் இல்லாமல் இருப்பவனும் நானே.

அந்தப் பரதெய்வ மாகுஞ் சிவனுனே
மந்திரங்கள் யாவின் மயனுமம் — மந்திரங்க
ளெல்லாங் கடந்தே யிலய சிருட்டிக
ளில்லா தவனுமா மேயெனைவிட் — டில்லாத் 8

9. எனக்கு அன்னியமற்ற, கண்ணுக்கு தெரியக்கூடியவைகளும் தெரியாதவைகளும், ஸ்திரமாக உள்ள தாவரங்களும், சஞ்சாரம் செய்யக்கூடிய ஜங்கமங்களும் இவையாவும் என்னால் வியாபிக்கப்பட்டவை. இந்த உலகத்தின் நாயகன் நானே. எல்லா வஸ்துக்களும் என்னால் பிரகாசிக்கப்படுகின்றன.

திருசியஞ் சூன்யந் திரஞ்சரமு மென்னுற்
பரவிடப் பட்டன வாமிச் — சருவமு
நானே யுலகத்தி னுதனெல் லாமென்னுற்
றுனே யிலகுவன தாமொவ்வா — தான 9

10. பலவிதமான உருவ பேதங்களினால், வேறுவேறாகிய உலகத் தோற்றங்களின் அடுக்குகளாக அமைந்து, மிக உயர்ந்த சிவ தத்துவத்திலிருந்து, இந்த உலக பரியந்தம் உள்ள அனைத்துமாகப் பிரகாசிக்கும், சிருஷ்டியிலுள்ள பொருள்கள் அனைத்தும், என்னிடத்தில் நிலைபெற்று இருக்கின்றனவாம்.

விவித வுருவத்தால் வேறுவே றுய
புவன நிரைகள் பொருந்திச் — சிவமுத
லிவ்வுலக மீறு யிலகும் பிரபஞ்ச
மவ்வளவு மென்னினிற்ப வாநேரே — செவ்வையாய் 10

11. உலகத்தில் எத்தனை விஷயங்கள் காணப்படுகின்றனவோ, எத்தனை விஷயங்கள் கேட்கப்படுகின்றனவோ, தேகத்தை மையமாகக் கொண்டு உள்ளும் புறமுமாக தோன்றுகின்ற பொருள்கள் அனைத்தும், என்னால் வியாபிக்கப்பட்டுள்ளது. அவை நானே என்று உணர்வாயாக.

எவ்வளவு காணப் படுபவோ விவ்வுலகி
லெவ்வளவு கேட்க வியைபவோ — வுள்வெளி
பற்றியொளிர் யாவும் பராவுமென் னுற்பரவ
லுற்றவை யாமவையென் றேருணர்தற் — குற்றவனும் 11

12. உணர்வதற்குரிய ஆன்மாவை அடையும் பொருட்டு, ஆன்மாவே நானென்று எண்ணினாலும், அந்த பரமான்மாவாக தான் அடைய விரும்பும் சிவன் தனக்கன்னியனென்றும், அவனினும் தான் வேறு என்றும், மயக்க அறிவினால் சிவனை உபாசிப்பவன், அந்த உபாசனா பலத்தினால், சிவத்துவத்தை அடையமாட்டானென்று அறிவாயாக.

ஆன்மாயா னென்னினு மப்பர மான்மாவாய்த்
தான்மேவ வுன்னுசிவன் றன்வேறு — மான்மேவி
யிவ்வா றுபாசிப்போ னெய்தான் சிவத்துவ
மவ்வாற்ற லாலென் றறியதனு — லெவ்வாற்றும் 12

13. ஆகையால் பரமாகிய சிவன் எனக்கன்னியமாய், நானும் சிவனுக்கு அன்னியன் என்னும் பேத பாவத்தை எப்படியாவது மனதினின்று பெயர்த்து, அந்த பரம்பொருளாகிய சிவன் நானேயாவேன் என்ற, அத்துவிதமாகிய பாவனையே எப்பொழுதும் அப்பியாசம் செய்வாயாக.

அன்னிய னுஞ்சிவ னன்னியனு னேயென்னும்
பின்னபா வத்தைப் பெயர்த்திடுக — வன்னசிவ
னுவன்யா னேயென்னு மத்துவித மாகுமிப்
பாவனையே யென்றும் பழகுக — வோவலற்(று) 13

14. நிரந்தர அத்துவித பாவனை பொருந்தியவனாய் எந்த இடத்திலும் எப்பொழுதும் சதா ஆத்ம தியானத்தில் நிலைபெற்றிருக்கும் யோகியானவன், எல்லாப் பொருள்களிடத்திலும், எல்லா சரீரங்களினுள்ளும், முழுமுதற் பொருளாகிய பரமேச்வரனையே காண்பான். இதில் கொஞ்சமும் சந்தேகமேயில்லை.

அத்துவித பாவனையே யார்ந்தோனு யெவ்விடத்து
நித்தமு மான்மாவி னிற்குமவ — னத்தனையே
யெல்லாவற் றுந்தனுக்கள் யாவினுள் ளுங்காண்ப
னில்லைசந் தேக மிதிலணுவு — மெல்லையற்(று) 14

15. எல்லையற்று ஏகமாயுள்ள ஆன்ம பாவனையை எப்பொழுதும் உள்ளத்தில் பற்றியுள்ளவன், உலக விஷயங்களில் மோகமும், பேத பாவமும் அற்று, அவற்றை வெறுத்து ஒழித்தவனாயிருப்பான். அந்த யோகிக்கு, எல்லாவற்றையும் உணர்தல், சித்திக்குமென்று பிரசித்தமான வேதநூல்களில் சொல்லப்பட்டுள்ளதாமென்று அறிவாயாக.

ஏகமா மிவ்வான்ம பாவனையோ டென்றுமுளான்
மோக விகற்ப முனிந்தோனும் — யோகிக்குச்
செவ்வேயெல் லாமுணர்தல் செப்பப்பட் டுள்ளதா
மவ்வேதந் தன்னி லறிவாயே — வெவ்வேறும் 15

16. சாஸ்திரங்களில், பிறப்பற்றவன் என்றும், ஈசுவரன் என்றும், எல்லோராலும் போற்றி துதிக்கப்படுபவன் எவனோ, அந்த தேகமற்றவனும் குணமில்லாதவனும், ஆன்மாவாகவும் இருக்கின்ற அவனே நானாகயிருக்கிறேன். இதில் சிறிதும் சந்தேகமில்லை.

சாத்திரங்கள் யாவற்றுஞ் சன்மமில னீசனென
வேத்திடப் பட்டா னெவனேவக் — காத்திரமில்
லான்குணமில் லானன்மா வாமவனே யாவேனே
யான்சிறிது மைய மிலையிதனி — லான்மாவாம் 16

17. என்றுமுள்ள தனது பரசொரூபத்தை அறியாதவனே, தோன்றி நின்று மறையக்கூடியதான, சிருஷ்டி தர்மங்களையுடைய ஜீவன் ஆவான். தனது உண்மை சொரூபத்தை எவன் அறிகிறானோ, அவன், என்றும் நிரந்தரமாகவுள்ளவனும் குற்றமில்லாத பூரண பரிசுத்தனும், சிவனும் அவனேயாவான். இதில் சந்தேகமில்லை என்று தேர்வாயாக. அவனுக்கு மறு பிறவி ஏது?.

தன்மெய் யறியா தவனே சிருட்டிமுதற்
றன்ம முறுபசு தானுவன் — றன்மெய்
யெவனறிவ னென்று மிருப்பான் விசுத்தன்
சிவனவனே யையமிலை தேர்வாய் — பவமே(து) 17

18.ஆகையினால், விவேகிகளாயுள்ளவர்கள், நித்தியமும் உள்ளத்தில் நன்றாக ஆய்ந்தறிந்து, நேருக்கு நேராக அறியத் தகுந்தது ஆன்மாவே என்று அறிக. ஆன்மாவே பரம், அபரம் என்ற பேதத்துடன், இருவிதமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்.

அதனல் விவேகிக ளானோர்நன் காய்ந்து
நிதமறியத் தக்கதான் மாநே — ரதுவே
பரவபர பேதம் பருமையனு பேத
மிருவிதமு மாயிலகு மேகாண் — மருவும் 18

19. அடையப்படும் சூனிய பதமாகிய ஞான சொரூபமே பரமாகும். அபரம் என்பது, சிருஷ்டி முதலான பஞ்ச கிருத்தியங்களுடன் கூடி பிரகாசிக்கும் ஞான சொரூபமாகும். பிரம்மத்தின் மந்திர ரூபத்தை அதனுடைய ஸ்தூல ரூபமாகச் சொல்லுவார்கள். அந்த பிரம்மத்தின் சூட்சும ரூபமானது, மாறாத ஆத்ம தியான சிந்தையில் நிலைபெற்றுள்ளதென்று தேர்ந்திடுவாய்.

பரமநிர் வாணம் பரமா மபரஞ்
சிருட்டி வகையாற் றிகழும் — பருமையா
மந்திரரூ பம்பகர்வர் சூக்கும மாறுத
சிந்தையி னின்றதாத் தேர்ந்திடுக — சிந்தையாம் 19

20. ஆத்ம சொரூபத்தை உணராது, முடிவின்றி பலவிதமாக யார் எதை உரைத்தாலும் என்ன பயன்? அது அதிசயிக்கத்தக்க வாக்கின் சாதுர்யமேயாகும். அதுமட்டுமல்ல, அவை புத்தி மயக்கத்திற்கும் காரணமாகுமென்று ஆறுமுகனே நீ அறிவாய்.

அஃதின்றி யாறு முகனே யனந்தவித
மெஃதுரைத்து மென்ன வியம்புதி — யஃது
வியக்கத் தகுஞ்சொல் விசித்திரமே புத்தி
மயக்கத்திற் கேது மதியாய் — நயக்கும் 20

21. செய்யப்படும் தருமங்கள், நற் செயல்கள் எல்லாம் ஆன்மாவினிடத்தில் தங்கியிருக்கின்றன. ஜீவன் எந்த நினைப்பினால் எதை சிருஷ்டிக்க சங்கற்பிக்கிறானோ, அதை அடையும் பொருட்டு, ஏகாக்கிர மனதினால், சிந்திக்கப்பட்ட அப்பொருளை அடைந்திடுவான். இதில் சந்தேகமில்லை.

தருமங்கள் யாவுமான் மாவின்கட் டங்கு
நிருமிப்பன் யாது நினைப்பா — லொருமையா
யுன்னியுன்னி யென்றுமதை யுற்றிடுவ னஃததனை
யென்னுமிதி லைய மிலையேது — மன்னுகமெய் 21

22. ‘உண்மையை அடைக’ என்ற ஆத்ம விஞ்ஞானமானது, எல்லா சாஸ்திர விஷயங்களின் சாரத்தையும் ஒன்று திரட்டி, சேர்த்து உருட்டி என்னாலே உனக்கு சொல்லப்பட்டது. எந்த விதத்தினாலாவது சர்வமும் ஆத்மமயமென்று உணர்ந்து, ஆத்ம தியானத்தில் வலிமை மிகுந்த தேர்ச்சி பெற்றவனாய் எப்பொழுதும் வாழ்வாயாக.

இப்படி யான்மவிஞ் ஞானமென் றென்னுலே
செப்பிடப் பட்டது சேர்த்துருட்டி — யெப்படியு
மெல்லாமு மான்மமய மென்றோர்ந்தே யான்மசிந்தை
வல்லானு யென்றுமே வாழ்வாயே — பல்லாரும் 22

23. பலவான தேவதா ஆராதனமோ, புனிதமான வேத அப்பியாசமோ, அக்னியில் செய்யக்கூடிய யக்ஞங்களோ அதற்கான பலவிதமான தட்சிணைகளோ, இந்த வகையான எந்த காரியமும் ஆன்மானுபவத்தில் இல்லை. அந்த ஆத்ம சொரூபமானது நிர்மலமாய் எங்கும் வியாவித்த முகமுடையதாய் ஸ்திரமாய் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஆத்ம விஞ்ஞானத்தையே நீ சார்ந்திடுவாயாக.

24. கேடுதரும் உலகத்தில் பிறப்பதும், இறப்பதுமான, இந்த சம்சாரமாகிய பெருங்கடலில் மூழ்கி, அதிலிருந்து மீள்வதற்குரிய புகலிடத்தை நாடி அலையும் ஜீவனுக்கு, புகலிடம் அளிப்பது, ஆத்ம விஞ்ஞானத்தையன்றி வேறொரு பொருளும் இல்லையென்றே அறிவாய்.

25. நிலையான அந்த பரசொரூபமே தானாகி, அந்த பரமாத்மாவை எவனொருவன் உறுதியாக உள்ளபடி அறிவானோ, அவன் எல்லாவிதமான அவஸ்தைகளையும் அடைந்து, அத்துடன் ஒன்றுபட்டு இருந்திடுவானாயினும், எந்த ஒரு முயற்சியும் இன்றியே மோட்ச வீட்டை அடைந்திடுவானென்று உணர்வாயாக.

26. ஆத்ம லாபத்தை விட சிறந்த, அடையத்தகுந்த லாபம், எதுவும் எங்கேயும் இல்லை. ஆகையினால், நீ எப்பொழுதும் அந்த ஆன்மாவையே உபாசித்திடுவாய் (தேகத்தில் உள்ளவன் போன்ற). இந்த ஆன்மா எவனோ, அவனே எங்கும் ஏகசொரூபமாய் நீக்கமற நிறைந்து நிற்கும் பரமாத்மாவென்று உணர்வாயாக.

27. ஆன்மாவானது மூச்சுக் காற்றாகிய பிராணனுமல்ல, அபானனுமல்ல. அவைகளுக்கு மேலாகவுள்ள மனம், பொறி, புலன்களாகிய கருவிகரணங்களுமல்ல. அது இவை எல்லாவற்றையும் அறிகின்ற உணர்வு மாத்திரமாய், நித்தியமாயுள்ள பரிபூரண வஸ்துவாகும். அந்த வஸ்துவாகிய ஆன்ம சிந்தனையை நீ எப்போதும் அடைந்திடுவாய்.

28. உணர்ந்தவர்க்கு அந்தப் பரந்தாமமானது, உருவமற்றதாகும். அந்த பரம்பொருள் உள்ளேயோ, வெளியேயோ இல்லை. வெகு தூரத்திலோ, மிக சமீபத்திலோ உள்ள எந்தவொரு குறிப்பிட்ட இடத்திலும் பொருந்தாது, அது எங்கும் வியாபித்து ஒளிர்கின்றது. நீ எப்போதும் உன் சிந்தையை அதனிடத்தில் செலுத்துவாயாக.

29. வியக்கும்படி குறுக்கிலும் மேலேயும் கீழேயும், உள்ளேயும் வெளியேயும், எல்லா இடங்களிலும் எப்போதும், நீக்கமற்று நிர்விஷயமாய் நிலைபெற்றிருக்கும் சூனியமாய், தனக்குத்தானே சுயமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும், ஆன்மாவையே நீ எப்பொழுதும், மேலும் மேலும் தியானம் செய்வாயாக.

தெய்வமோ வேதமோ தீயிற்செய் வேள்வியோ
செய்வகையிற் சேர்பலவாந் தட்சிணையோ — வெவ்வகையு
மங்கில்லை நின்மலமா யெங்குமுக மார்ந்ததாய்த்
தங்கான்ம விஞ்ஞானஞ் சார்வாய்நீ — பங்க 23

மரணபவ சம்சார மாக்கடன் மூழ்கிச்
சரணநா டிச்சா ருயிர்க்குச் — சரண
மருள்வதவ் வான்மவிஞ் ஞானத்தை யன்றி
யொருபொருள்வே றின்றெனவே யோர்க — திரமாம் 24

பரமாகி யப்பர மான்மாவை யாவ
னுரமாக வுள்ளபடி யோர்வ — னொருமுயல்வு
மின்றியவன் வீடுறுவ னெல்லா வவத்தைகளு
மொன்றிடுவ னேனு முணர்ந்திடுக — வென்றிசேர் 25

ஆன்மலா பத்தினு மன்னிய மாம்பேறு
தான்மற்றொன் றெங்குமே தானில்லை — யான்மாவை
யென்றுமுபா சித்திடுக விவ்வான்மா யாவனவ
னென்றுபர மான்மாவா மோருளத் — தென்றுமே 26

அல்ல பிராண னபானனுமே யன்றவ்வா
றல்ல வவற்றின்மே லாங்கரண — மெல்லா
முணர்வதுவா யுள்ளபரி பூரணமா மான்ம
வெணநிதமு மெய்துவா யேநீ — யுணரின் 27

அகத்தும் புறத்திலு மேயில்லை யஃது
மிகத்தூரத் தண்மையிலு மேவா — தகளமா
மந்தப் பரந்தாம மார்ந்தொளிரு மாங்கேநீ
சிந்தையை யென்றுஞ் செலுத்துக — விந்தை 28

குறுக்கொடுமேல் கீழிலுமே கூறுபடு முள்ளும்
புறத்திலு மெங்குமெப் போது — முறப்பெறுஞ்
சூனியமாய்த் தானே சொலிக்குமான் மாவையே
மேனிதமும் பாவனைசெய் மேன்மேலும் — வானிகராம் 29

30. ஆகாயம் போன்ற ஆன்மா சூனியமானதல்ல. அசூனியமானதும் அல்ல. அது சூனியமல்லாததும் சூனியமுமாகும். இந்த ஆன்மா தானே எல்லா இடத்திலும் வியாபித்திருந்தும், எந்த இடத்திலும் பட்சபாதமில்லாமல், சமமாக விளங்குகிறது. அந்த பரமான ஆன்மாவையே சர்வகாலமும் சிந்தனை செய்வாயாக.

31. துயரம் மிக்க பலரோகமும், ஜாதி முதலான நாம ரூபங்களும் சாராது, தனக்கு வேறொரு ஆதாரமும் இல்லாததால், பிரகாசிக்கின்ற களங்கமற்ற, குணமற்ற பரிபூரண ஆன்மாவை, நீயும் நிரந்தரமாக தியானிப்பாயாக.

32 அன்னிய சார்பில்லாததாய், பற்றுக் கோடு அற்றதாய், தனக்கொரு உபமானமாக எதையும் கூற முடியாததாய் தூய்மையானதாய், நித்தியமாய், பிரமாணத்தால் அறிந்து கொள்ள முடியாததாய், என்றும் ஸ்திரமாக நிலைத்திருக்கும் ஆன்மாவை நீ எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் தியானித்திடுவாய்.

33. சகல கருமங்களையும் நீக்கி, ஆசைகளை அறவே ஒழித்து, ஜனக் கூட்டத்தை விட்டு விலகி எப்பொழுதும் தன்னைவிட்டு நீங்க முடியாத தன்னிடத்திலேயேயுள்ள, தன்னையே தனக்குள்ளமர்ந்து தன்னைக் கொண்டே, தியானிக்க வேண்டும் என்பதை உணர்வாய்.

34. அன்னியமான தான் வசிக்கும் நாட்டையும், தனது ஜாதியையும், சிறப்பு மிகுந்த குலத்தையும், தானிருக்கும் ஆசிரமம் இவைகளை அனுசரித்து தோன்றியதான, பலவித எண்ணங்களை ஒழித்து, விவேகியானவன் தனதுண்மை சொரூபத்தின் தியானத்தையே தினமும் செய்ய வேண்டும்.

35. சொரூப தியானமாகிய இதுவே முதலில் ஜபிக்கத்தகுந்த மந்திரமாகும். இதுவே தேவதா மூர்த்திகளுக்கு செய்யும் பூஜையும் அர்ச்சனையுமாகும். இதுவே தியானமும் தபசுமாகும். ஆகையால் எண்ணங்கள் யாவற்றையும் நீக்கி, ஸ்வசொரூப தியானம் ஒன்றையே நீ திடமாக பற்றி துணிவுடன் செய்வாயாக.

36. பலவித எண்ணங்களல்லாத ஆன்மாவாகிய தான், எண்ணங்களோடு ஒன்றுபட்டுள்ள மனதை, எண்ணுவதற்கு இடமேயில்லாததாக செய்திடுவாய். ஓய்வின்றி நினைக்கும் மனதை, ஆன்மாவிலேயே நிலைபெறச் செய்து, மற்றெதையும் சிறிதும் நினையாமல் இருந்திடுவாய்.

சூனியமு மல்ல வசூனியமு மல்லதாஞ்
சூனிய மல்லதுமாஞ் சூனியமாந் — தானெங்கும்
பக்கபா தஞ்சற்றும் பற்றுத வான்மாவை
யெக்காலுஞ் சிந்தை யியற்றுதி — துக்கமாம் 30

ஆமயமோ டாதார மற்றதாய் வர்ணமொடு
நாமரூ பங்களு நண்ணிடா — தாமந்
நிரஞ்சன நிர்க்குண வான்மாவை நீயு
நிரந்தர மாக நினைவா — யுரம்பெறவே 31

ஆசிரய மாலம்ப மற்றதாய் மானத்தாற்
கோசரமா காதுவமை கூறரிதாய் — மாசிலியல்
மன்னியதாய் நித்தியமாய் மன்னிய வான்மாவை
யுன்னிடுக நாளு முவந்துளமே — பின்னும் 32

வினைகளெல் லாமுமே விட்டு நிராசை
தனையுற்றுச் சங்கந் தணந்து — பினையென்றுந்
தன்னிலே தன்னாலே தன்னிலமர் தன்னையே
யுன்னிட வேண்டு முணருள்ளே — யன்னியமாய்த் 33

தேயமொடு சாதி திகழ்வர்ண மாசிரம
மாய விவற்றை யனுசரித்து — மேயபல
சிந்தனைக ளெல்லாஞ் சிதைத்தறிஞன் றன்னுருவின்
சிந்தனையே செய்க தினந்தினமு — முந்தும் 34

இதுமந் திரமா மிதுதே வதையா
மிதுவே தியான மெனலு — மிதுவே
தவமாகு மெண்ணங்க ளெல்லாந் தணந்து
சுவரூப சிந்தை துணிவாய் — விவிதமாம் 35

எண்ண மிலனுந்தா னெண்ணமோ டொன்றியதை
யெண்ணற் கிடனிலதாய்ச் செய்திடுக — வெண்ணு
மனதையான் மாவிலே மன்னச்செய் தொன்று
மனதா னினையற்க மற்று — மனதாலே 36

37. ஆன்மாவானது மனதினால் சிந்திக்கக்கூடிய வஸ்துவன்று. சிந்திக்க முடியாததும் அல்ல. அது சிந்தனை செய்கின்ற சித்தமன்று. ஆயினும் அதுவே சித்தமுமாகும். அது எங்கும் சமமாக வியாபித்துள்ளது. அந்த பரமான ஆன்மாவை நீ எப்பொழுதும் தியானம் செய்வாயாக.

38. எட்ட முடியாத ஆன்மாவையே, உள்முகப்பட்ட மனதினால் நினைத்து நீ எப்பொழுதும் தியானம் செய்திடுவாய். மனதை விஷயங்களின் பற்றினின்று நீக்கி, பற்றற்ற நிலையில் ஸ்திரமாக இருக்கச் செய்து, எல்லா தத்துவங்களையும் கடந்து நிற்கும் ஆன்மாவினிடத்தில், எந்த சுகமானது மிகுந்து பூரணமாக நிறைந்து கிடைக்கப் பெறுமோ, அந்த சுகத்தை நீ அனுபவித்திடுவாய்.

39. தூயதாய் வேறுபாடற்று, மனதினால் நினைக்க முடியாத அந்த வஸ்து, தனக்கு மூலமாக எந்தவொரு பொருளுமற்றதாய், தனக்கு திருஷ்டாந்தமாக எதையுமே சொல்லமுடியாததாய், எந்த உபமானத்தையும் கூற இயலாது, மிக உன்னதமாய் பிரகாசிக்கிறது. அப்படி ஒளிரும் அதுவே எல்லாவற்றுக்கும் மேலான பரமானந்தமாகும். அந்த ஆனந்த சொரூபத்தில் நீ முழுதுமாக ஆழ்ந்திடுவாய்.

40. பிறவிதோறும் வரும் விஷயப்பற்றை அறவே ஒழித்து மனதில் படர்ந்து செழித்தோங்கும் எண்ணங்களை அழித்திடு. மனமானது எப்பொழுது மோனநிலையை அடையுமோ, அப்பொழுது ஏக அத்துவித சொரூபமாய் பிரகாசிக்கின்ற அந்த வஸ்துவே, பரமானந்தமென்று சொல்லப்படுவதாகும்.

41. என்றும் துன்பமில்லை. எல்லா திக்குகளும், எல்லா இடங்களும், எல்லா காலங்களும், ஆத்ம யோகத்திற்கு அனுகூலமானவையே என்று சாஸ்திரங்களால் சொல்லப்படுகின்றன. ஜாதி, குல, ஆசிரமம் முதலான இவற்றினால் ஏற்படும் பேதங்கள், ஞான சொரூபத்தை துளியும் அணுகாதென்று அறிவாய்.

42. பசுக்கள் பல நிறங்களை கொண்டவையாயினும், அவற்றின் பாலெல்லாம் ஒரே நிறமுடையதாகும். அதைப் போன்றே பலவித ஜீவர்கள், பல்வேறு நிறமுடைய பசுக்களைப் போலவும், அந்த உயிர்களில் விளங்கும் ஞானம், பாலின் ஒரே நிறத்தை போன்றதுமாகும். இதை விவேகிகள் உணர்கின்றனர். இங்கே கூறப்பட்ட இது திருஷ்டாந்தம் என்றறி.

43. பற்றின்றி எங்கும் நிறைந்த அந்த பிரம்மமானது, எவ்விடத்திலும் முகமுடையதாக பிரகாசித்து ஒளிர்வதால், உன் மனதை அந்த பிரம்மத்தினிடம் ஒழிவின்றி, அதிலேயே ஊன்றச் செய்து, தேசம், திக்கு என்னுமிவைகளின் பேதத்தைச் சற்றும் சிந்திக்க வேண்டாம்.

சிந்திக்கத் தக்கதல சிந்திக்கொண் ணாதல்ல
சிந்தை யலததுவே சிந்தையுமா — மெந்தவோர்
பக்கமுஞ் சாயாப் பரமான வான்மாவை
யெக்காலுஞ் சிந்தைசெய் யேமனமும் — புக்ககமே 37

சிந்தைசெய் வாய்தினமுஞ் சிந்தைக்கெட் டாததையே
சிந்தை நிராசிரயஞ் செய்தேநீ — யெந்தசுக
மத்தத்து வாதீத நிட்கள வான்மாவிற்
சித்தித் திடுமோ செறிந்துள்ளே — சுத்த 38

நிருவிகற்ப மாகி நினைக்கவொண் ணாதா
யொருமுதறிட் டாந்த முருதா — யொருவுவமை
யற்றத்தி யந்தமா மஃதுபரா னந்தமாய்ச்
சொற்றிடப் பெற்றததிற் றோய்முற்றும் — பற்றும் 39

விடயப்பற் றெல்லாமே விட்டு மனத்திற்
படரும் விருத்தி படுப்பா — யடையுமென்
றுன்மனி பாவமன் றென்றும தேபரம
வின்ப மெனலாவ தேயென்றுந் — துன்பமிலை 40

எத்திக்கு தேயமு மெல்லாக்கா லங்களுமே
யொத்ததுயோ கத்திற்கென் றோதுநூ — லித்தனையு
ஞானத்திற் பேதமே நண்ணுவர் ணாசிரம
மானவிவற் றாலென் றறியுண்மை — பானமாம் 41

பால்வண்ண மொன்று பசுக்கள் பலநிறங்கள்
பால்போலு ஞானமெனப் பார்த்திடுவர் — சால்புபல
லிங்கமுள வெல்லாம் பசுக்களை யேய்ந்தவே
யிங்கறிதிட் டாந்த மிதுவேயாஞ் — சங்கமற 42

யாவிலுமுற் றுப்பரவி யப்பிரம மெங்குமுக
மேவிய தாக மிளிர்வதா — லோவலற
வுன்மனத்தை யப்பிரமத் தூன்றியே தேயந்திக்
கென்னுமிவை யெண்ணிடா தேசற்று — மின்னதென 43

44. அந்த பரமான்மாவை அடைந்த ஜீவன் முக்தனுக்கு, இன்னது என்று எந்த ஒரு அடையாளமோ, வர்ணாசிரமங்களாகிய எந்த ஒரு ஆசிரமமோ இந்த உலகத்தில் இல்லை. ஆசார அனுஷ்டானமுமில்லை. அந்த முக்த புருஷன் செய்யக்கூடிய காரியத்தினின்று எந்த ஒரு பிரயோஜனமோ பலனோ அவனுக்கு இல்லை. அவன் செய்தேயாக வேண்டுமென்ற காரியமும் எதுவுமில்லை. வேத விதியும், அவனுக்கு எதையும் விதிக்கவில்லை என்பதைத் திடமாகத் தெரிந்து கொள்வாய்.

45. அந்த யோகியானவன் உலக சஞ்சாரம் செய்தாலும், ஒரே இடத்தில் இருந்தாலும், தூங்கினாலும், ஜனக்கூட்டத்திலிருந்தாலும், விழித்திருந் தாலும், உண்ணும் காலத்திலும், பருகும் போதும், பெருங்காற்று, கடுங்குளிர், கொடுமையான வெய்யில் ஆகிய இவைகள் தாக்கும் காலத்திலும், எந்தவித அவஸ்தையிலும் எக்காலத்திலும் தாக்கற்றவனாய் இருப்பான்.

46. பயமும், தரித்திரமும், சரீரத்தை பீடிக்கும் ரோகங்களும், எரிக்கும் ஜுரமும், அஜீரணமும், தனக்கு நேரிடும் காலத்திலும் ஆன்ம நிஷ்டனாய், பரம சாந்தியுடன் பிரகாசித்து பேதமற்று, எப்போதும் ஆன்மாவில் திருப்தியுற்றவனாயிருப்பான். எதைக் கண்டும் சற்றும் கலக்கம் அடையமாட்டான்.

47. ஓரிடத்தில் இருந்தாலும், மற்றோரிடத்திற்கு போனாலும், அங்கிருந்து வந்தாலும், அப்படி போனவனும் வந்தவனும் நானல்ல. நாடுங்கால் எனக்கு போக்கோ வரவோ இல்லை. நான், மாயையின் காரியத்தை சேர்ந்தவனுமல்ல. சதா மாறிக் கொண்டேயிருக்கும், சிருஷ்டி தருமங்களில் ஒன்றுபட்டு அத்துடன் முன்பு தோய்ந்திருந்தவனுமல்ல. இனி தோயப்போகிறவனுமல்ல.

48. செய்கின்ற சகல கர்மங்களும் பிரகிருதியின் காரியமேயாகும். கருமங்களின் பிறப்பிடமாகிய மூலமெதுவோ, அதுவே பிரகிருதி எனப்படும். ஆனால் நானோ நிர்மலன். இயல்பாய், எந்த ஒரு செயலுமில்லாதவனென்றே, யுக்தமான தத்துவமறிந்த ஆத்மனிஷ்டன் தியானிப்பான்.

49. ஆத்ம சொரூபமாகிய ஞானிக்கு, மாயையின் காரியங்களினால் பந்தமுண்டாகாது. அவன் பந்தத்தினின்று விடுதலையடைந்து, முக்தன் என்னும் பெயர் அடையப் பெற்றான். அந்த முக்தன் மாயையின் காரியங்களென்று பேசப்படும் தோஷங்களினால் எக்காலத்திலும் பாதிக்கப்பட மாட்டான்.

50. விளக்கானது தனது பிரகாசத்தினால், இருளின் உருவத்தை ஒழித்து பிரகாசிப்பதைப் போல சுத்தஞான ஒளியான ஆத்ம ஜோதியானது; விளக்கமற்ற அஞ்ஞானத்திலிருந்து உண்டாகி, அனைத்தையும் மூடி மறைக்கும் இருட்டை அழித்து சுயமாக பிரகாசிக்கிறது.

இப்புவியி லோர்குறியின் றாசிரமா சாரமிலை
யப்பரமான் மாவினிலை யார்ந்தோனுக் — கப்புருடன்
செய்ததனு லொன்றில்லை செய்திடவு மொன்றில்லை
செய்யென் விதியுமிலை தேர்திரமாய் — வையமிசை 44

செல்லினு நிற்கினு நித்திரை செய்யினும்
புல்லினுஞ் சாக்கிரம் போசனநீர் — கொள்ளினுங்
காற்றுகுளிர் வெய்யிற் கலந்திடுங் காலுமெவ்
வாற்றினுமெக் காலத்து மற்றகத்தே — தோற்று 45

பயமும் வறுமைநோய் பற்றுசுர மந்த
மியைந்திடுங் காலத்து மேதுந் — தியங்கானே
யான்மநிட் டன்சாந்த னூர்நிட் களனுகி
யான்ம திருத்தனு வானுலகி — லூன்மன்னிப் 46

போனலும் வந்தாலும் போனவன் வந்தவனு
நானுகேன் போக்குவர வுடினிலை — நானப்
பிரகிருதி தன்மாறப் பெற்றதரு மந்தோய்ந்
திருந்தோ னிருப்போ னலனே — பொருந்தும் 47

பிரகிருதி காரியமாங் கன்மங்கள் பேசும்
பிரகிருதி கன்மப் பிறப்பே — நிருமலன்
யானேர் செயலிலனென் றேயுக்த தத்துவவித்
தானே னனுசந்திப் பானதுவே — யானுன் 48

அவற்குப் பிரகிருதி யாற்பந்த மில்லை
யவன்முக்த னும மடைந்தா — னவன்றான்
பிரகிருதி காரியமாப் பேசுதோ டத்தா
லொருபொழுது மொட்ட லுறானே — விரியும் 49

ஒளியா லிருளி னுருவ மொழித்து
விளக்கெவ் விதந்தான் விளங்கும் — விளக்கமி
லஞ்ஞானத் துண்டாகி யாரிருளை மாய்த்தொளிருஞ்
சுஞ்ஞான சோதியான் மாதானும் — விஞ்ஞானி 50

51. விளக்கிலிருக்கும் நெய் தீர்ந்துபோன தீப ஜோதியானது, ஓய்ந்து விடுதல் போல, மெய்ப்பொருளாகிய ஆன்மாவை இடையறாது தியானம் செய்யும் யோகியானவன், சொரூப ஸ்திதியிலேயே ஒன்றுபட்டு ஓய்ந்திருப்பான். ஆன்மாவைவிட அடையத்தகுந்த உயர்ந்த பொருளோ, நிலையோ, அவனுக்கு வேறொன்றுமில்லை. இது சத்தியம்.

நெய்தீர்ந்த தீபந்தா னிர்வாண முற்றிடல்போன்
மெய்யான்ம சிந்தை விடாமலே — செய்யோகி
யான்மாவின் கண்ணேயே யார்ந்திருப்ப னான்மாவின்
மேன்மேவ வொன்றின்று மெய்யிடமாம் — வான்மன் 51

52. ஆகாயம் நிறைந்துள்ள குடத்தை எடுத்துச் செல்லும் போது, அந்த குடத்தினுள்ளே இருக்கும் ஆகாசமானது, குடத்துடன் செல்வதாக உணரப்படினும், உண்மையில் எடுத்துச் செல்லப்படுவது குடம் மட்டுமன்றி ஆகாயம் செல்வதில்லை! அதைப்போன்றே ஆன்மா சரீரத்தில் இருப்பது போல் தோன்றினாலும் அது ஆகாசத்தைப் போல சலனமற்று நிலை பெற்றிருக்கிறது.

குடங்கொண்டு போங்காற் குடத்துளா காய
முடன்செல்வ தாக வுணர்ந்துங் — குடந்தானே
சென்றிடுவ தாகாயஞ் செல்வதிலை யான்மாவு
நின்றிடுமே யாகாய நேர்நிலையே — யன்றிக் 52

53. மேலும், குடமானது உடையும்பொழுது அந்த குடத்திலுள்ள ஆகாசமானது, மகா ஆகாசத்தோடு ஒன்றாய்க் கலந்து விடும். அதைப் போன்றே ஜடமாகிய இந்த உடலானது மரணமடையும் பொழுது, தேகத்திலுள்ளதைப் போன்று தோன்றிய ஆன்மாவும், பரமாத்மாவுடன் ஒன்று சேர்ந்துவிடும்.

குடமுடை யுங்காற் குடத்துளவா காய
முடன்மகா காயமோ டொன்றுஞ் — சடமா
முடலக லுங்கா லுடலுளவான் மாவு
முடன்பரமான் மாவா யுறுமே — திடமாமீ(து) 53

54. இவ்வாறு உறுதியுடன் சிருஷ்டி கர்த்தாவாகிய எல்லாம் உணரக்கூடிய சர்வஞ்ஞானன பரமேச்வரன், தனக்கே உரிய அதிகாரத்துடன் அன்று சொல்லி அருளினான். மனதை வென்று எல்லா பந்தங்களினின்றும் விடுபட்டு மோட்ச வீட்டை அடைந்தவன், மெய்யுணர்வோடு என்றும் அழிவில்லாது, எங்கும் வியாபித்து நிறைவுற்று உள்ளவனாவான்.

என்றதி காரியா யெல்லா முணரீச
னன்றதிகா ரத்தொடிவ் வாறறைந்தான் — வென்றெல்லாப்
பந்தங்க ளின்வீடு பற்றினோன் முற்றுணர்வோ
டந்தமிலா தெங்குமுள னாமதனாற் — புந்தியுளோன் 54

55. அதனால் நல்ல விவேகமுள்ளவன், ஆகமங்களில் கூறப்பட்ட, கிரியை, சரியை முதலான அனைத்தையும் அறவேவிட்டு, ஆத்ம யோக சமாதியிலே நிலைபெற்று, இந்த சமாதி நிலைக்கும் மேலாக வேறு எதுவுமேயில்லை என்று, நன்கு ஆராய்ந்துணர்ந்து மனதில் வேறுபாடுகள் சற்றும் சாராமல் ஒழித்திடுவாய்.

ஆகமங்க ளெல்லா மறவிட் டமலான்ம
யோக சமாதியே யுற்றிதன்மே — லாகவய
லொன்றுமே யின்றெனா வோர்ந்தே மனவிகற்ப
மொன்று முறாம லொழித்துளத்தே — நின்றான்ம 55

56. ஆன்ம பிரக்ஞையை உடைய யோகியானவன் சதாகாலமும் தியானித்து, தேகாத்ம பாவம் சிறிதுமின்றி, தன் சுபாவமான சொரூப நிலையில் எப்பொழுதும் பொருந்தியிருப்பான். அந்த ஞானி அப்பர சொரூபத்தின் தர்மங்களையே, தனது தர்மங்களாகக் கொண்ட தர்மியாவான். அவன் உள்வெளி எங்கும் நிறைந்து பிரகாசிக்கும் முக்தனாவான். எல்லா இடத்திலும் தடையேதுமின்றி இஷ்டம் போல் சஞ்சாரம் செய்பவனாய் இருப்பவனுமாவான்.

விஞ்ஞான மிங்ஙன் விடாதுன்னி யோகிதா
னெஞ்ஞான்று மெய்துமுட லின்மையச் — சுஞ்ஞானி
யத்தரும தர்மி யகம்புறமு மார்முத்த
னெத்தலமு மேகுவனா மேமனம்போ — னித்தமுமே 56

57. தன் இஷ்டப்படி எப்போதும் முற்றும் உணரக்கூடிய தன்மையுடனும், இன்பத்துடனும், பேரறிவாளனாகவும், சுதந்திரனாகவும், என்றும் வற்றாத எல்லையற்ற வலிமையுடன், சுத்த ஞானியானவன் எப்பொழுதும் பிரகாசிப்பான். பந்த பாசமென்னும் நோயற்ற ஆன்மாவாகிய அவன், பரிசுத்தமான தூயமேனியடைந்து சிவத்துடன் இரண்டறக் கலந்து ஏகமாயிருப்பான்.

முற்றுணர் வின்பமொடு மூதறிவு தன்வயம்
வற்றல் வரம்பில் வலியுமிவை — யுற்றென்று
மாரு நிராமய வான்மா வவன்சிவமே
சேரும் விசுத்தவுடல் சேர்ந்தவற்குத் — தேருமோர் 57

58. உலகோர் செய்யத்தக்கதாய்க் கருதும் ஜெபமும், தேவதாமூர்த்தியை அர்ச்சனை செய்தலும், தீர்த்த ஸ்நானங்களும், ஹோமாதி காரியங்களும், வேறெந்த சாதனமும் இல்லை. தருமமும், அதர்மமும், அவற்றின் பலன்களும், குலத்தின் முன்னோர்களுக்கு அளிக்கும் பிண்ட சிரார்த்தாதிகளும், தர்ப்பணாதி தண்ணீர் கிரியைகளும் அவனுக்கு தேவையில்லையாம். மேலும் சொல்கிறேன் கேள்.

59. ஆத்ம யோகிக்கு செய்வதற்கரிய எந்த நியமங்களுமில்லை. எந்த உபவாசங்களுமில்லை. எந்த விதமான கர்ம பிரவிருத்திகளுமில்லை. நிவிருத்தி கர்மங்களும் இல்லை. அவன் நிவிருத்தி அடைய வேண்டியதுமில்லை. அவனுக்கு நேர்மை மிகுந்த உன்னதமான பிரம்மசாரி விரதமும் இல்லையென்பதை நீ அறிவாய்.

60. வீணே நெருப்பில் விழுவதையும், நதிகளில் விழுவதையும், மலை உச்சியினின்று விழுவதையும் விட்டு, தூய்மையான சிவஞானமாகிய அமுதத்தை அனுபவித்து, சிவசொரூபமாகவே நின்று என்றுமுள்ள நிர்மலனாய், சிருஷ்டி தர்மங்களிலிருந்து விடுபட்டவனாய், உன்னிஷ்டம் போல் சஞ்சாரம் செய்வாய்.

61. அருமை புத்திரனாகிய குகனே! நான் இப்போது உனக்கு சத்தியம், சத்தியம், சத்தியமென்று மூன்று முறை சொல்லி, சத்தியம் செய்து கூறுகிறேன். இதைவிட, உத்தமமானதும், மேன்மை மிகுந்ததுமாக தெரியத்தக்கது வேறு எதுவுமே, எவ்விடத்திலும் இல்லை.

62. தவம் நிறைந்து நிர்மலனும் மூடபுத்தி இல்லாதவனுமாய் விவேக புத்தியுடையவனாய் தூய்மையான உள்ளம் படைத்தவனாய் உலகில் பார்க்கக் கூடிய பொருள்களெல்லாம் பரிசுத்த சிவசொரூபமே என்று, தூய்மை நிறைந்த துல்லியமான பாவத்தினால், சுத்த சிவத்தை தியானித்து, சிவயோகியானவன், சிவசொரூபத்தை அறிந்திடுவானென்று தேவனாகிய சிவபெருமான் குகனுக்கு உபதேசித்து அருளினார்.

ஸ்ரீ ரமணனால் தமிழில் மொழிபெயர்த்து அருளப்பட்ட இது ஜீவர்களின் இதய அமிர்தமாகும்.

நாமசெப மர்ச்சனை நன்னீரி லாடலு
மோமமுஞ் சாதனமற் றென்றுமின் — றுமே
தருமாதர் மப்பலன்கள் பிண்டமொடு தண்ணீர்க்
கிரியைகளு மில்லையாங் கேணீ — புரியவோ 58

இல்லை நியமங்க ளில்லையுப வாசமு
மில்லை பிரவிருத்தி யெவ்வகையு — மில்லை
நிவிருத்தி நேர்பிரம சாரி விரத
மவற்கில்லை யென்றே யறிவா — யவலமாய் 59

அங்கிநீர் வீழ்வசல நின்றுவிழ லற்றுசிவ
துங்கஞா னமுதந் துய்த்துசிவ — அங்கனாய்
நித்தியனாய் நின்மலனாய் விட்டுச் சிருட்டிதன்மஞ்
சித்தம்போற் சஞ்சாரஞ் செய்திடுக — புத்திர 60

சத்தியஞ் சத்தியஞ் சத்தியமென் றேமூன்று
சத்திய மிப்போது சாற்றினே — னுத்தமம்
மிக்க திதிலெங்கும் வேறெதுவு மேதெரியத்
தக்க திலைகுகனே தான்றவமே — தொக்க 61

அமலனு மூடமதி யல்லனாய்ப் புத்தி
நிமலனாய் நின்மலான் மாவாய் — விமலமாம்
பாவத்தி னல்விமலம் பார்ப்பவெலா மென்றமலம்
பாவித்துப் பார்த்திடுவன் பாரென்றான் — றேவன் 62

இதனைத் தமிழி லிசைத்தான் ரமண
னிதயத் தமிழ்தா மிது.